## ஆறாம் வகுப்பு தமிழ் சங்க, (ம) மருவியகாலம்

1. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை" - வரை எத்தகைய மொழியினம் பரவியிருந்தது ?
[A] தமிழ் [B] ஈப்ரு
[C] துளு [D] தெலுங்கு

2. "வானம் அளந்தனைத்தும் அளந்திடும் வன்மொழி" - என்று பாரதியாரால் போற்றப்பட்ட மொழி ?
[A] இலத்தீன் [B] தமிழ்மொழி
[C] பிரஞ்சு [D] சமஸ்கிருதம்

3. "தமிழெனும் அளப் பரும் சலதி" தமிழ் கடலை விட பெரியதாக உருவகபடுத்தியவர் யார் ?
[A] பாரதியார் [B] பனம்பரனார்
[C] கம்பர் [D] கபிலர்

4. "தமிழ்நாடு லெமூரியாவில் இருந்தபோது எகிப்து நாடு நீருள் இருந்தது" - என்று கூறியவர் ?
[A] எல்லீஸ்துரை [B] முத்துசாமி
[C] கால்டுவெல் [D] ஸ்காட்எலியட்

5. சமுத்திரகுப்தரின் அமைச்சர் "சாணக்கியர்" எழுதிய அர்த்தசாஸ்திரத்தில் எந்ததலைநகரை பற்றி கூறியுள்ளார்
[A] கபாடபுரம் [B] மதுரை
[C] தஞ்சை [D] லெமூரியா

6. காஞ்சிபுரத்தை பற்றி கூறிய "பதஞ்சலி" - வாழ்ந்த நூற்றாண்டைத் தேர்க ?
[A] கி.பி 150 [B] கி.மு 150
[C] கி.மு 7 [D] கி.பி 6

7. அரசர் சாலமனுக்கு மயில் தோகையும்,யானை தந்தமும் வாசனைப்பொருட்களும் தமிழகத்திலிருந்து எந்த நூற்றாண்டில் கப்பல்கள் மூலம் சென்றது ?
[A] கி.பி 5 [B] கி.மு 15 [C] கி.மு 10 [D] கி.பி 6

8. "தமிழ்த் தூதுவர்" ______________________
[A] தனிநாயகம் அடிகள் [B] அகத்தியர்
[C] முருகன் [D] ஔவையார்

9. திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், குன்றம் எறிந்த, இவ்வரியுடன் தொடர்புடையவர்கள் ?
[A] சிவபெருமான், அகத்தியர்
[B] சிவபெருமான், யானைமுகன்
[C] சிவபெருமான், விநாயகர்
[D] சிவபெருமான், முருகவேல்

10. "தமிழ்" - என்னும் சொல்லுக்கு பொருந்தாப்பொருள் எது
[A] நீர்மை [B] அழகு
[C] இனிமை [D] வளமை

11. "மதுரமான மொழி தமிழ்" -
[A] திருமங்கையாழ்வார் [B] வால்மீகி
[C] கால்டுவெல் [D] கம்பர்

12. உலகிலேயே "பக்தியின் மொழி தமிழ்" - தமிழ் என்று எடுத்துரைத்தவர் யார் ?
[A] இளங்கோவடிகள் [B] அருணகிரியார்
[C] திருநாவுக்கரசர் [D] தனிநாயகம் அடிகள்

13. "சங்கத்தமிழ் மூன்றும் தா" -
[A] இளங்கோவடிகள் [B] சாத்தனார்
[C] ஔவையார் [D] நாவுக்கரசர்

14. மூன்று சங்கங்கள் வைத்து தமிழை வளர்த்தவர்கள் (பாண்டியர்கள்) என்று எந்த நூல் கூறுகிறது
[A] மத்தவிலாசம் [B] தொல்காப்பியம்
[C] களவியல்உரை [D] பாட்டியல்நூல்

15. சங்கம் என்ற சொல் தமிழ்ச்சொல் இல்லை, சகரம் மொழிமுதல் வாராது என்று கூறியவர்
[A] அகத்தியர் [B] தொல்காப்பியர்
[C] இளங்கீரனார் [D] பாவாணர்

16. "தமிழ் வையைத் தண்ணம் புனல்"- ______________
[A] தொல்காப்பியம் [B] புறநானூறு
[C] கலித்தொகை [D] பரிபாடல்

17. பொருந்தாதது :
[A] நன்பாட்டுப் புலவனாய்ச் - அப்பர்
[B] சங்கத்தமிழ் மூன்றும் தா - ஔவையார்
[C] சங்கமலிதமிழ் - திருமங்கையாழ்வார்
[D] சங்கமுகத்தமிழ் - மாணிக்கவாசகர்

18. "மகாபாரதம் தமிழ்படுத்தும் மதுராபுரிச்சங்கம் வைத்தும் "
[A] சின்னமனூர் செப்பேடு
[B] வேள்விக்குடி செப்பேடு
[C] உத்திரமேரூர் கல்வெட்டு
[D] செவிவழிச்செய்தி

19. "பதிற்றுப்பத்து" பாடியவர்களைப் பொருத்துக :
[A] முதல் பத்து - அரிசில் கிழார்
[B] ஐந்தாம் பத்து - கபிலர்
[C] ஏழாம் பத்து - பரணர்
[D] எட்டாம் பத்து - கிடைக்கவில்லை
[A] 2 1 4 3
[B] 4 2 3 1
[C] 2 3 4 1
[D] 4 3 2 1

20. காக்கைப்பாடினியார் (ம) நச்செள்ளையார் இருவரும் பதிற்றுப்பத்தில் எந்தப்பத்தைப் பாடியுள்ளனர் ?
[A] இரண்டாம் பத்து [B] மூன்றாம் பத்து
[C] ஆறாம் பத்து [D] ஒன்பதாம் வகுப்பு

21. 'நல்' - எனும் அடைமொழியால் குறிக்கப்படுவது ?
[A] நற்றிணை [B] குறுந்தொகை
[C] புறநானூறு [D] அகநானூறு

22. "எரி எள்ளு அன்ன நிறத்தன" எனத் தொடங்கும் பாடல் எட்டுத்தொகை எந்த நூலின் கடவுள் வாழ்த்துப்பாடல் ?
[A] அகநானூறு [B] புறநானூறு
[C] கலித்தொகை [D] பதிற்றுப்பத்து

23. பொருத்துக :
(1) நற்றிணை - பூரிக்கோ
(2) குறுந்தொகை - மாறன் வழுதி
(3) அகநானூறு - உருத்திர சன்மன்
(4) ஐங்குறுநூறு - கூடலூர்கிழார்
[A] 4 3 1 2
[B] 2 1 3 4
[C] 4 2 3 1
[D] 1 2 3 4

24. "ஐங்குறுநூறு" நூறு உரை விளக்கத்தை உ.வே.சா வெளியிட்ட ஆண்டு ?
[A] 1900 [B] 1901 [C] 1902 [D] 1903

25. குறுந்தொகை வரிகள் அல்லாதது ?
[A] 'கொங்குதேர் வாழ்க்கை'
[B] 'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று'
[C] 'வினையே ஆடவர்க்கு உயிரே'
[D] 'சாதல் அஞ்சேன்அஞ்சுவல் சாதல்'

26. உடலில் நிகழும் மெய்ப்பாடுகள் 'எட்டு' - எது இல்லை ?
[A] இளிவரல் [B] மடமை
[C] பெருமிதம் [D] வெகுளி

27. முதல், இடை, கடைச் சங்கங்களை ஆதரித்த அரசர்கள் சரியான வரிசையைத் தேர்க ?
[A] 49, 89, 59 [B] 59, 49, 89
[C] 89, 59, 49 [D] 49, 59, 89

28. பின்வருவனவற்றுள் சங்கங்கள் பற்றி தவறானது ?
[A] முதற்சங்கம் - கடல் கொண்ட தென்மதுரை
[B] இடைச்சங்கம் - கபாடபுரம்
[C] கடைச்சங்கம் - இன்றைய மதுரை
[D] நான்காம் சங்கம் - தஞ்சாவூர்

29. "இசைப்பாட்டு"
[A] பதிற்றுப்பத்து [B] புறநானூறு
[C] கலித்தொகை [D] பரிபாடல்

ARIVU TRUST

**30.** கீழ்கண்ட பாடல் எண்ணிக்கையில் பொருந்தாதது :
[A] பரிபாடல் 70 [B] பதிற்றுப்பத்து 80
[C] கலித்தொகை 150 [D] அகநானூறு 401

**31.** பின்வரும் எட்டுத்தொகை அடி அளவில் சிறிய நூல்
[A] நற்றிணை [B] குறுந்தொகை
[C] ஐங்குறுநூறு [D] கலித்தொகை

**32.** 3 அடி சிற்றல்லை 6 அடி பேரெல்லை கொண்ட நூல்
[A] நற்றிணை [B] குறுந்தொகை
[C] ஐங்குறுநூறு [D] கலித்தொகை

**33.** எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் உரைக்கும் நூல்
[A] நற்றிணை - குறுந்தொகை
[B] பதிற்றுப்பத்து - புறநானூறு
[C] கலித்தொகை - புறநானூறு
[D] அகநானூறு, புறநானூறு

**34.** "ஆற்றுப்படுத்துதல்" - என்றால் என்ன ?
[A] வழிகாட்டல் [B] வழிப்படுத்துதல்
[C] மெல்லசெல்லல் [D] விரைந்துசெல்லல்

**35.** "புலவராற்றுப்படை" - என்று அறியப்படுவது ?
[A] பொருநர் ஆற்றுப்படை
[B] சிறுபாணாற்றுப்படை
[C] திருமுருகாற்றுப்படை
[D] பெரும்பாணாற்றுப்படை

**36.** பத்துப்பாட்டு நூல்களுள் மிகப்பெரிய (ம) சிறிய நூல் எது
[A] பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை
[B] மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு
[C] திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை
[D] குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை

**37.** தொல்காப்பியத்தில் உள்ள பாடல்கள் எண்ணிக்கை
[A] 26350 [B] 1028 [C] 1610 [D] 3363

**38.** 'ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு 'தமிழ்' கற்பிக்க 'கபிலர்' பெருமானால் பாடப்பட்டது ?
[A] குறிஞ்சி மலர் [B] குறிஞ்சிப் பாட்டு
[C] குறிஞ்சித்திணை [D] குறிஞ்சி கலி

**39.** பொருத்துக :
[a] நெடுநல்வாடை (1) மாங்குடிமருதனார்
[b] முல்லைப்பாட்டு (2) உருத்திரங்கண்ணனார்
[c] மதுரைக்காஞ்சி (3) நக்கீரர்
[d] பட்டினப்பாலை (4) நப்பூதனார்
[A] 3 2 4 1
[B] 3 4 2 1
[C] 3 4 1 2
[D] 3 4 1 2

**40.** பாரி மாண்டபின் அவன் மகளிர்க்கு (அங்கவை,சங்கவை) மணமுடித்து வைத்த புலவர் ?
[A] கம்பர் [B] கபிலர்
[C] அதியமான் [D] பிசிராந்தையார்

**41.** அரிய நெல்லிக்கனியை கவியரசி ஔவைக்கு ஈந்த புவியரசன் யார் ?
[A] அதியமான் [B] பாரி [C] காரி [D] ஓரி

**42.** பத்துப்பாட்டில் உருத்திரங்கண்ணனார் பாடிய இரு நூல்
[A] பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை
[B] மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு
[C] பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை
[D] குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை

**43.** "தமிழ்மறை" - பதினெண்கீழ்கணக்கு நூலைத்தேர்க
[A] வள்ளுவம் [B] நாலடியார்
[C] நான்மணிக்கடிகை [D] இனியவை நாற்பது

**44.** "வள்ளுவர் செய் திருக்குறளை மருவறநன் ருணர்ந்தோர் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி"
[A] சுந்தரர் [B] பாரதிதாசன்
[C] சுந்தரம் பிள்ளை [D] பாரதியார்

**45.** 'வேளாண் வேதம்'
[A] முக்கூடற்பள்ளு [B] நாலடியார்
[C] திருக்குறள் [D] சமூகம்

**46.** நாலடியாருக்கு அதிகாரம் வகுத்தவர் யார் ?
[A] சி.வை.தாமோதரம் பிள்ளை [B] நச்சினார்க்கினியர்
[C] பரிமேலழகர் [D] பதுமனார்

**47.** நான்மணிக்கடிகை ஆசிரியர் "விளம்பிநாகனார்" இதில் விளம்பி என்பது எதைக் குறிக்கிறது ?
[A] ஊர்பெயர் [B] குடிப்பெயர்
[C] சிறப்புப்பெயர் [D] பதவிப்பெயர்

**48.** "குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே" -
[A] இன்னாநாற்பது [B] இனியவைநாற்பது
[C] நாலடியார் [D] திரிகடுகம்

**49.** "திரிகடுகத்தில்" - இடம் பெறாத மருந்துப்பொருள்
[A] சுக்கு [B] நெருஞ்சி
[C] மிளகு [D] திப்பிலி

**50.** ஆசாரக்கோவை ஆசிரியர் "பெருவாயின் முள்ளியார்" - இவர் எந்த ஊரைச்சேர்ந்தவர் ?
[A] பாயிரம் [B] கும்பகோணம்
[C] கயத்தூர் [D] பொள்ளாச்சி

**51.** "ஆசாரவித்து"
[A] ஆசாரக்கோவை [B] முதுமொழிக்காஞ்சி
[C] திருப்பாவை [D] அனைத்தும்

**52.** பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள், நாலடியார் ஆகிய இரு நூல்களுக்கு அடுத்த நிலையில் உள்ளது ?
[A] நல்வழி [B] வாகுண்டாம்
[C] பழமொழி [D] நன்னெறி

**53.** சிறுபஞ்சமூலத்தில் இடம்பெற்ற மருந்து பொருட்கள் எத்தனை உள்ளது ?
[A] 5 [B] 9
[C] 7 [D] 16

**54.** "நிலையாமை" - பற்றி எந்த நூலில் கூறப்பட்டுள்ளது ?
[A] சிறுபஞ்சமூலம் [B] ஏலாதி
[C] முதுமொழிக்காஞ்சி [D] திரிகடுகம்

**55.** பொருத்துக :
[a] பழமொழி (1) மாங்குடிமருதனார்
[b] சிருபஞ்சமூலம் (2) காரியாசான்
[c] முதுமொழிக்காஞ்சி (3) மூன்றுரை அரையனார்
[d] மதுரைக்காஞ்சி (4) கூடலூர் கிழார்
[A] 2 3 4 1
[B] 3 4 2 1
[C] 3 4 1 2
[D] 3 2 4 1

**56.** கணிமேதாவியார் எழுதிய இரு நூல்கள் எவை ?
[A] ஐந்திணைஐம்பது, திணைமாலை நூற்றைம்பது
[B] களவழிநாற்பது, திணைமொழி ஐம்பது
[C] திணைமாலை நூற்றைம்பது, ஏலாதி
[D] இன்னிலை, கார் நாற்பது

**57.** காரைக்கால் அம்மையாரின் கணவர் பெயர் என்ன ?
[A] கோவலன் [B] பரமதத்தன்
[C] பரமன் [D] சீவகன்

**58.** இறைவனின் திருவருளால் பேய் வடிவம் பெற்றவர் ?
[A] ஆண்டாள் [B] ஔவையார்
[C] புனிதவதியார் [D] உமையம்மை

**59.** பெரியபுராணத்தில் 63 அடியவர்களுள் ஒருவராக அம்மையாரையும் சேர்த்து அவரது வரலாற்றை 66 பாடல்கள் மூலம் விளக்கமளித்தவர் ?
[A] சீத்தலைச்சாத்தனார் [B] இளங்கோவடிகள்
[C] மாணிக்கவாசகர் [D] சேக்கிழார்

**60.** திருக்குறள் எந்த யாப்பு / பாவகையில் எழுதப்பட்டது ?
[A] வெண்பா [B] குறள் வெண்பா
[C] ஆசிரியப்பா [D] கலித்தாழிசை

ARIVU TRUST

**61.** பின்வருவனவற்றுள் தவறான இணை எது ?
[A] தொழிலாளர் நாள் - மே 1
[B] உலகப் புத்தக நாள் - ஏப்ரல் 23
[C] குழந்தைகள் நாள் - நவம்பர் 24
[D] கொடி நாள் - டிசம்பர் 7

**62.** அடைக்கலம் என்று வந்து அடைந்தவர் விரும்பியதனை அளிக்கும் மன்னன் ?
[A] சொக்கநாதர் [B] முத்துசாமித்துரை
[C] மருதுபாண்டியன் [D] ராசேந்திரசோழன்

**63.** "சொக்கநாதபுலவர்" பற்றி எது / எவை சரி ?
I. தூத்துக்குடி (ம) தச்சநல்லூரில் பிறந்தவர்
II. 25 மேற்பட்ட தனிப்பாடல்களை இயற்றியவர்
III. இவரது காலம் 19 ஆம் நூற்றாண்டு
IV. இரு பொருள்பட "சிலேடை" பாடுவதில் வல்லவர்
[A] I தவறு II, III, மற்றும் IV சரி
[B] I சரி II, III, IV தவறு
[C] I, II, III மற்றும் IV சரி
[D] I, II, III சரி IV தவறு

**64.** பின்வருவனவற்றுள் எது தவறானது ? 'ஆறு'
[A] ஆறு என்பது நீரில் ஓடுகின்ற குதிரையைக் குறிக்கும்
[B] ஆறு என்பது எண் (6) யும் குறிக்கும்
[C] ஆறு என்பது செல்லும் வழியையும் குறிக்கும்
[D] கோட்டு மரம் - கிளைகளை உடைய மரம்

**65.** "கூனல்இளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்" என்று திரிகூடராசப்ப கவிராயர் யாரைக் குறிப்பிட்டுள்ளார் ?
[A] அகத்தியர் [B] கூன்பாண்டியன்
[C] நின்றசீர் நெடுமாறன் [D] சிவபெருமான்

**66.** "வருந்தக் காண்பது" - ______________
[A] கிண்கிணிக் கொத்து [B] மின்னார் மருங்கு
[C] சூல்உளைச் சங்கு [D] நல்லறம் கீர்த்தி

**67.** குற்றாலநாதராகிய சிவபெருமான் வாழும் நாடு எங்கள் நாடு, திருக்குற்றால குறவஞ்சியில் இடம்பெற்ற நாடு ?
[A] வடகரை நாடு [B] தென்கரைநாடு
[C] சீவலப்பேரி நாடு [D] ஆரிய நாடு

**68.** பின்வருவனவற்றுள் "மாத்திரை" அளவில் தவறானது ?
[A] மெய்யெழுத்து - கால் மாத்திரை
[B] உயிரெழுத்து குறில் - ஒரு மாத்திரை
[C] உயிர்மெய் குறில் - ஒரு மாத்திரை
[D] உயிர்மெய் நெடில் - இரண்டு மாத்திரை

**69.** 'நெய்தல்' நிலத்தில் அமைந்த வாழ்விடங்கள் __________
[A] பட்டினம் [B] பாக்கம்
[C] புலம் [D] குப்பம்

**70.** கீழ்கண்டவற்றுள் பொருந்தாதது எது ?
[A] சிறந்த நகரங்களை குறிப்பது - தருமபுரம்
[B] கடற்கரையில் உருவாகும் நகரங்கள் - காயல்பட்டினம்
[C] கடற்கரை சிற்றூர்கள் - மீனம்பாக்கம்
[D] 'நிலத்தை குறிப்பது' - தாமரைப்புலம்

**71.** "திரோபதை தன்னைத் துயில் உரிஞ்சது அந்தக் காலம்" சரியான பெயரைத் தேர்வு செய்க ?
[A] சீதை [B] உமையம்மை
[C] பார்வதி [D] பாஞ்சாலி

**72.** "உடுமலை நாராயணகவி" பொருத்தமற்றது எது ?
I. திரைப்படபாடல் ஆசிரியர், நாடக எழுத்தாளரும் கூட
II. சமுதாயப்பாடல்மூலம் சீர்திருத்த கருத்தை பரப்பியவர்
III. 'பகுத்தறிவு கவிராயர்'உலக மக்கள் அழைக்கப்பட்டவர்
IV. வாழ்ந்த காலம் : 25.09.1899 முதல் 23.05.1981 வரை
[A] I [B] II
[C] III [D] IV

**73.** "எத்தனைநாள் திரிந்து திரிந்து உழல்வேன் ஐயா !
[A] காளமேகப்புலவர் [B] நாராயணக்கவி
[C] ராமச்சந்திரகவிராயர் [D] முத்துராமலிங்கம்

**74.** கீழ்கண்டவற்றுள் தவறான இணை எது ?
[A] பதுமத்தான் - தாமரையில் உள்ள சிவன்
[B] குமரகண்ட வலிப்பு - ஒருவகை வலிப்பு நோய்
[C] குரைகடல் - ஒலிக்கும் கடல்
[D] பரங்குன்றுளான்- திருப்பரங்குன்ற முருகன்

**75.** "மக்கள் கவிஞர்" -______________________
[A] நாராயணகவி [B] கல்யாணசுந்தரம்
[C] எம்.ஜி.ராமச்சந்திரன் [D] கண்ணதாசன்

**76.** பின்வருவனவற்றுள் எதிர்ச்சொல் அல்லாதவை ?
[A] இரவு x பகல்
[B] கறுப்பு x வெள்ளை
[C] இனிப்பு x கசப்பு
[D] இம்மை x துன்பம்

**77.** தாராசுரம் கோவிலின் "விமானமும் மண்டபமும்" எதனைக் காட்டுவதாக "கார்ல் சேகன்" கூறுகிறார் ?
[A] வான்வெளி [B] விடிவெள்ளி
[C] 'மின்னல்' கீற்று [D] நட்சத்திரகூட்டம்

**78.** "கும்பகோணம்" - பற்றி தவறானதைத் தேர்க ?
[A] காவிரி பாயும் சோழவள நாடு
[B] கலைகளின் விளை நிலம்
[C] வியக்கவைக்கும் கட்டிடக்கலை, சிற்பக்கலை
[D] இதன் வடபுறம் அரசலாறு பாய்கிறது

**79.** __________ மண்டலத்துக்குள் நுழைந்தாலே, எங்கும் இசையொலி, "தாம்தரிகிட தீம்தரிகிட" என்னும் இசை மழையில் நனையும் அனுபவம் கிடைக்கும்.
[A] சேரமண்டலம் [B] சோழமண்டலம்
[C] பாண்டியமண்டலம் [D] பல்லவமண்டலம்

**80.** உழைக்கும் மக்களின் துயரங்களையும் பொதுவுடமைச் சிந்தனைகளையும் தம்முடைய பாடல்கள் வழிப் பரவலாக்கிய "பட்டுக்கோட்டையார்" இறந்த ஆண்டு
[A] 1930 [B] 1899
[C] 1943 [D] 1959

**81.** "தலைபிரியாச் சொல்" சரியான பொருளைத்தேர்க
[A] முதமைச்சொல் [B] தலைமைச்சொல்
[C] நீங்காதசொற்கள் [D] எதுவுமில்லை

**82.** "இனிய உளவாக இன்னாத கூறல் கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று" இக்குறளில் உள்ள எதிர்ச்சொல் என்ன ?
[A] இனிய x இன்னாத
[B] காய் x கனி
[C] கூறல் x தற்று
[D] கவர்ந்து x உளவாக

**83.** "உழவர் ஏரடிக்கும் சிறுகோலே அரசரது செங்கோலை நடத்தும் கோல்" என்று உழவர் பற்றி பாடியப்புலவர் ?
[A] திருவள்ளுவர் [B] கபிலர்
[C] கம்பர் [D] ரா.பி.சேதுப்பிள்ளை

**84.** உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்! பாரதியார் பாடல் இடம் பெற்ற ரா.பி.சேதுப்பிள்ளை நூல்
[A] தமிழின்பம் [B] ஊரும் பேரும்
[C] திருவள்ளுவர் நூல்நயம் [D] தமிழ் விருந்து

**85.** "அழகுக்கலைகள்" எத்தனை வகைப்படும் ? என்று மயிலை சீனி. வேங்கடசாமி கூறியுள்ளார்
[A] 3 [B] 5
[C] 7 [D] 9

**86.** பொருத்துக :
(1) மனுமுறை கண்டவாசகம் - சமணமுனிவர்கள்
(2) என் சரிதம் - கபிலர்
(3) குறிஞ்சிப்பாட்டு - உ.வே.சாமிநாத ஐயர்
(4) நாலடியார் - இராமலிங்கஅடிகள்
[A] 4 3 1 2 [B] 2 1 3 4
[C] 2 1 4 3 [D] 4 3 2 1

ARIVU TRUST

**87.** "வல்லினம்" → "மெல்லினம்" → "இடையினம்" தவறானது
[A] க் ஞ் ச் ஞ் ட் ண் [B] க் ச் ட் த் ப் ற்
[C] ங் ஞ் ண் ந் ம் ன் [D] ய் ர் ல் வ் ழ் ள்

**88.** பொருத்துக :
[A] ராஜதண்டனை - முடியரசன்
[B] வீரகாவியம் - கண்ணதாசன்
[C] சுவரும் சுண்ணாம்பும் - சுரதா
[D] ஊசிகள் - மீ.ராஜேந்திரன்
[E] நாவல் பழம் - நா.காமராசன்
[A] 2 1 4 3 5 [B] 5 3 1 2 4
[C] 2 1 4 5 3 [D] 2 1 3 4 5

**89.** ____________ என்னும் சொல்தான் முதலில் வரும் ?
[A] அம்மா [B] அப்பா
[C] அக்காள் [D] அண்ணி

**90.** பின்வருவனவற்றை அகரவரிசையில் அமைத்து எழுதுக
[A] அம்மா, அப்பா, அண்ணி, அங்காடி, அன்னம்
[B] அப்பா, அம்மா, அன்னம், அண்ணி, அங்காடி
[C] அங்காடி, அண்ணி, அன்னம், அம்மா, அப்பா
[D] அங்காடி, அண்ணி, அப்பா, அம்மா, அன்னம்

**91.** கீழ்கண்ட பெயர் - வினையில் தவறானது எது ?
[A] அவள் - வந்தாள்
[B] அவர்கள் - வருவார்கள்
[C] அது - வந்தது
[D] அவை - வந்தன

**92.** "பொலோனியம், (ம) ரேடியம்" கண்டறிந்ததற்கு 1903 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றவர்கள் யார் ?
[A] மேரி கியூரி [B] பியரி கியூரி
[C] ஏ.எச்.பெக்கோரல் [D] அனைவரும்

**93.** "பரதநாட்டிய அடவுகள்" எக்கோயிலில் உள்ளது ?
[A] தஞ்சை [B] தாராசுரம்
[C] மதுரை [D] மாமல்லபுரம்

**94.** அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து <u>இன்சொலன்</u> ஆகப் பெறின். சரியானபொருளைத்தேர்க
[A] இனியசொல்
[B] இனிய சொற்களைப் பேசுபவன்
[C] கடுஞ்சொல் பேசுபவன்
[D] நன்மை தரும் சொற்களைப் பேசுபவன்

**95.** பின்வருவனவற்றுள் தவறான இணை எது ?
[A] அணி - அழகுக்காக அணியும் நகைகள்
[B] நயன் ஈன்று - நல்ல பயன்களைத் தந்து
[C] செம்பொருள் - மெய்ப்பொருள்
[D] தகைசால் - அன்பில் சிறந்த

**96.** "உம்பர்" - சரியான பொருளைத் தேர்ந்தெடு ?
[A] சற்றுத் தொலைவில் பார் [B] முதுகுப்பக்கம்
[C] மேலே [D] கீழே

**97.** "முத்துராமலிங்கத்தேவர்"பற்றி சரியானதைத் தேர்க
[A] இவர் விருப்பத்திற்கு இணங்க 06.09.1939 அன்று இராமநாதபுரத்துக்கு வந்தவர் நேதாஜி
[B] தமிழகஅரசு 1995 - ல் இவரது அஞ்சல் தலையை விளியிட்டுச் சிறப்பித்தது
[C] தம் சொத்துக்களை 17 பாகங்களாகப் பிரித்து ஒரு பாகத்தை தனக்குவைத்துக்கொண்டு 16 பாகத்தை இனாம் சாசனம் எழுதிவைத்தார்
[D] தமிழகஅரசு மதுரையில் இவரது திருவுருவச்சிலை நிறுவி சிறப்பித்துள்ளது

**98.** "சன்மார்க்க சண்டமாருதம்" - என்று புகழப்படுபவர் ?
[A] வள்ளலார்
[B] ஆறுமுகநாவலர்
[C] முத்துராமலிங்கத்தேவர்
[D] பரிதிமாற்கலைஞர்

**99.** "வீரம் இல்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகும்" என எடுத்துரைத்தவர் ?
[A] பெரியார் [B] அம்பேத்கர்
[C] தேவர் [D] திரு.வி.க

**100.** முத்துராமலிங்கத்தேவருக்கு சொத்துக்கள் எத்தனை ஊர்களில் இருந்தது ?
[A] முப்பது [B] முப்பத்தொன்று
[C] முப்பத்திமூன்று [D] முப்பத்திரெண்டு

"முடியாது" என்று நீ சொல்வதை எல்லாம் யாரோ ஒருவன் எங்கோ செய்துகொண்டிருக்கிறான்

- அப்துல் கலாம்.

## ANSWER KEY 6 TAMIL

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 A | 2 B | 3 C | 4 D | 5 A | 6 B | 7 C | 8 A | 9 D | 10 D |
| 11 B | 12 D | 13 C | 14 C | 15 B | 16 D | 17 D | 18 A | 19 D | 20 C |
| 21 A | 22 D | 23 B | 24 D | 25 D | 26 B | 27 C | 28 D | 29 D | 30 A |
| 31 C | 32 C | 33 B | 34 B | 35 C | 36 B | 37 C | 38 B | 39 C | 40 B |
| 41 A | 42 C | 43 A | 44 C | 45 B | 46 D | 47 A | 48 B | 49 B | 50 C |
| 51 A | 52 C | 53 A | 54 C | 55 D | 56 C | 57 B | 58 C | 59 D | 60 B |
| 61 C | 62 B | 63 A | 64 A | 65 D | 66 C | 67 D | 68 A | 69 D | 70 A |
| 71 D | 72 C | 73 C | 74 A | 75 B | 76 D | 77 A | 78 D | 79 B | 80 D |
| 81 C | 82 B | 83 C | 84 D | 85 B | 86 D | 87 A | 88 D | 89 C | 90 D |
| 91 B | 92 D | 93 B | 94 B | 95 D | 96 C | 97 C | 98 C | 99 C | 100 D |

EDUCATIONAL ARIVU TRUST SINCE-1999
Arivu Trust Reg.No;32/2016

JOIN ARIVU TNPSC
GROUP 2(A)ADMISION GOING ON